## குளியாப்பிட்டி பல்கலைக்கழகக் கல்லூரி – 2016

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த குளியாப்பிட்டி பல்கலைக்கழகக் கல்லூரியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 1882/51 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த குளியாப்பிட்டிப் பல்கலைக்கழகக் கல்லூரியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தற்போது பாவனையில் காணப்படுகின்ற குளியாப்பிட்டி பல்கலைக்கழக கல்லூரி அமைந்துள்ள 5.42 ஹெக்டேயர் காணி மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 11,775,208 தொகையான கட்டிடங்களின் பெறுமதியில் ரூபா 10,661,197 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக கட்டிடங்களின் பெறுமதி ரூபா 1,114,011 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரியதாகச் செலுத்தவேண்டிய ரூபா 33,000 தொகையான போக்குவரத்துச் செலவினம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளச் செலுத்தவேண்டிய நூலக வைப்பு ரூபா 163,500 பொறுப்புக்களின் கீழ் கணக்குவைப்பதற்குப் பதிலாக மாணவர் நலன்புரிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 756(1) | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வுச் சபை 2016 திசெம்பர் 14 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்த போதிலும், பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் குறித்த திகதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 யூலை 06 ஆந் திகதிய எஸ்ஈசீ/2015/05 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | வெளிவாரி விரிவுரையாளர்களுக்காக படிகளைக் கொடுப்பனவு செய்யும்போது அறவிடவேண்டிய ரூபா 11,950 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கடமை வீட்டுத் தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையதள வசதிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சி இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 71,603 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதி விளைவுகள் ரூபா 1,912,306 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 667,134 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,579,440 அதிகரிப்பொன்றைக் காணப்பித்தது. மீளாய்வாண்டில் மீண்டெழும் மானியத்தில் ரூபா 12,095,935 தொகையான அதிகரிப்பு மேற்கூறப்பட்ட முன்னேற்றத்திற்கு தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்தபோது நிறுவனத்தின் நிதி விளைவில் மிகையொன்று காணப்பட்டது. நிதி விளைவில் ஊழியர் ஊழியத்தை மீளச் சீராக்கும் போது பல்கலைக்கழகக் கல்லூரியின் 2015 ஆம் ஆண்டில் ரூபா 15,192,720 தொகையான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 25,683,276 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக கல்லூரிச் சட்டவாக்கத்தின் பிரகாரம் தேசிய தொழில் தகைமைகள் 5, 6 மற்றும் 7 ஆம் மட்டங்களின் பாடநெறிகள் மற்றும் அதுவும் அதற்குச் சமமான மட்டங்களில் வேறு தொழில்நுட்பப் பாடநெறிகளை நடாத்துதல் கல்லூரியின் நோக்கங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த நோக்கங்களை நிறைவேற்றும் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமைகள் 5, 6 மற்றும் 7 ஆம் மட்டங்களில் பாடநெறிகள் மற்றும் அதற்குச் சமமான மட்டங்களில் வேறு 09 பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், குளிரூட்டி மற்றும் வளிப்பதனாக்கி தொழில்நுட்பப் பாடநெறிகளுக்காக விரிவுரையாளர்களைச் சேர்ப்பதற்கு முடியாமையின் காரணமாக அந்தப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 08 பாடநெறிகளுக்காக மாத்திரம் 238 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அந்த மாணவர்களில் 09 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர்.

(ஆ) சகல பாடநெறிகளுக்காகவும் 2016 யூலை மாதத்தின் போது நடாத்தப்பட்ட தேசிய தொழில்சார் பயிற்சிப் பாடநெறி 5-2 இறுதிப் பரீட்சையின் விடைப்பத்திரம் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் இரண்டாவது தடவை பரீட்சித்து பெறுபேறுகளை வழங்குதல் தாமதமடைந்ததன் காரணமாக 2017 ஏப்ரல் மாதம் வரையிலும் அப்பெறுபேறுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2016 யூலை 21 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த தேசிய தொழில்சார் பயிற்சி பாடநெறியின் 5 ஆம் மட்டத்தின் இரண்டாவது வருடப் பரீட்சை விடைப்பத்திரம் இரண்டாவது தடவை பரீட்சிப்பதற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சகல பாடநெறிகளுக்காகவும் 2016 யூலை மாதத்தின் போது நடாத்தப்பட்ட அடிப்படையில் பரீட்சைக்காக தோற்றிய 231 மாணவர்களில் 56 பேர் பரீட்சையில் சித்தியடையாதிருந்ததுடன் அதனை சதவீதமாக எடுப்போமாயின் 24 சதவீத பெறுமதியைக் கொண்டிருந்தது. பொறியியல் மாணவர் மட்டத்தில் தொழில்நுட்ப பாட விதானத்திற்காக பயிற்சி வழங்கலின் ஆர்வம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை மாணவர்கள் சித்தியடையாமைக்கான காரணம் என பல்கலைக்கழக கல்லூரியின் நிர்வாகப் பணிப்பாளர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

(ஈ) 06 பாடநெறிகளின் செயன்முறைப் பயிற்சிக்காக வெளி நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 98 ஆக இருந்ததுடன் அதில் 35 மாணவர்கள் பயிற்சியை இடைநடுவே விட்டுச் சென்றிருந்தனர்.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 15,374,800 தொகையான 02 வாகனங்களின் உரித்தை கல்லூரிக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது திறன் அபிவிருத்தி பயிற்சி செயற்திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த ரூபா 30,912,106 தொகைக்குரிய செயற்திட்டங்கள் உரிய பிரகாரம் திட்டமிடப்படாமை மற்றும் முகாமை செய்யாமையின் காரணமாக ரூபா 3,091,406 தொகையொன்று இறத்மாலனை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக கல்லூரிக்கு மீண்டும் அனுப்பவேண்டியேற்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 1,846,434 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மோட்டார் வாகன கராஜ் மற்றும் ரூபா 1,787,900 செலவில் நிர்மாணிக்கப்பட்ட இயந்திர வேலைப்பிரிவு மின்சாரம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இன்மையின் காரணமாக பாவனைக்கு எடுக்கமுடியாததாகக் காணப்பட்டது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று சுற்று மின்சார வசதிகள் இன்மையின் காரணமாக மோட்டார் வாகனப் பிரிவில் (Automobile) சில உபகரணங்கள் செயற்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதன் அடிப்படையில் மாணவர்களுக்குரிய பயிற்சிகளை பூரணமாக வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் 229 மாணவர்களிடமிருந்து ரூபா 343,500 தொகையான மீளச் செலுத்தப்பட்ட நூலக வைப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அழகுக் கலை பாடநெறிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 400,000 பெறுமதியான தளபாடம் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் 07 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 289,307 பெறுமதியான கணனி அச்சிடல் மை இருப்புப் (Torner Cartridge) புத்தகத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அவற்கை விநியோகித்தல் தொடர்பாகவும் எத்தகவல்களும் காணப்படவில்லை.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

குளிரூட்டி மற்றும் வளிப்பதனாக்கி தொழில்நுட்ப பாடநெறிகளுக்காக ரூபா 41,061,371 பெறுமதியான இயந்திரம், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும், பாடநெறி ஆரம்பிக்காமையின் காரணமாக அந்த இயந்திரம், கருவிகள் என்பன விளைவற்றுக் காணப்பட்டது.

### 4.5 பெறுகை நடைமுறைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொத்தக் கிரய மதிப்பீட்டை 62 சதவீதத்தால் விஞ்சி மீளாய்வாண்டின் போது 05 சந்தர்ப்பங்களில் ரூபா 3,449,657 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன உரிய அங்கீகாரமின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) பரீட்சை மண்டப கதிரைகள் 100 ஐக் கொள்வனவு செய்யும்போது அரச வணிகக் (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்று ரூபா 4,880 தொகையான ஆகக் குறைந்த விலை கருத்தில் கொள்ளப்படாது ஒன்று ரூபா 6,549 வீதம் தனியார் நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக ரூபா 166,900 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்களின் பிரகாரம் கல்விசார் பதவியணியனரில் 08 விரிவுரையாளர்களும், மற்றும் 02 காட்சிப்படுத்துனர்களும் மற்றும் கல்விசாரா பதவியணியினரில் 03 முகாமைத்துவ உதவியாளர்களுமாக 13 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிக்காக விரிவுரையாளர்கள் சேர்க்கப்படாமையின் காரணமாக ரூபா 1,108,725 தொகையொன்று வெளிவாரி விரிவுரையாளர்களுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் மீளய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிர்வாகச் சபையின் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் அது காலரீதியில் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.2 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க வழிகாட்டிக் கோவையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்திருந்த போதும் அந்தப் பிரிவைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பெறுகைகள் திட்டம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் பல்கலைக்கழக கல்லூரியினால் மீளாய்வாண்டிற்கான பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 12 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 23,933,279 ஆக இருந்ததுடன் அவற்றின் உள்ளபடியான செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 15,456,394 ஆனமையால் 13 சதவீதம் முதல் 210 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கல்லூரியின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | வைப்புக் கணக்கின் ஊடாக கணக்கீடு செய்யவேண்டிய நிறுத்திவைத்தல் பணம் எதிர்காலத்தில் கொடுக்கவேண்டியதாக கணக்கீடு செய்தல். |
| | | (ii) | பேரேட்டுக் கணக்குகளில் மீதி காணப்படாமை. |
| | | (iii) | நாட்குறிப்புப் பதிவுகள் பேரேட்டுக் கணக்குகளில் உள்ளடக்கப்படாமை. |
| (ஆ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படாமை. |
| | | (ii) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண வகுப்புக்கள் உரிய பிரகாரம் வகைப்படுத்தப்படாமை. |
| | | (iii) | வருமானத்தையும் செலவினத்தையும் கணக்கீடு செய்யும்போது பயன்படுத்தப்பட்ட குறியீட்டு இலக்க முறை சரியாக பயன்படுத்தப்படாமை. |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | ஓட்ட அட்டவணை பூரணப்படுத்தப்படாமை. |
| | | (ii) | எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படாமை. |
| | | (iii) | வாகனப் பொறுப்பு உத்தியோகத்தர்களின் மேற்பார்வை இன்மை. |
| | | (iv) | சம்பவத்திரட்டுப் புத்தகம் பேணப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | (i) | பதவியணியினர் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யாமை. |
| | | (ii) | வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை. |
| (உ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) | குறித்த கால எல்லையில் பாடநெறி பூர்த்தி செய்யப்படாமை. |
| | | (ii) | போதியளவான செயன்முறைப் பயிற்சியொன்று மாணவர்களுக்குக் கிடைக்காமை. |
| | | (iii) | வெளி பயிற்சி நிறுவனங்களிலிருந்து மாணவர்களுக்கு பிரயோக பயிற்சியினை வழங்குவதற்கு ஏற்பட்டமை. |